DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 121 /2024**

Deposition of Witness: DW1.

| | | | |
|---|---|---|---|
| Name | சுப்பிரமணியன் | Father Name – | அங்கமுத்து |
| Age | 62 | Village – | குலாளர்பாளையம் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. வாதிகள் அனைவரும் இறந்துபோன மகாலிங்கத்தின் மக்கள் என்றால் சரிதான். வழக்குரை சொத்து மகாலிங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மகாலிங்கம் என்னிடம் ரூ.11,500/– கடன் வாங்கிவிட்டு ஈடு கடன் பத்திரம் 03.03.2005 ம் தேதி பதிந்து கொடுத்தார் என்றால் சரிதான், ஆனால் நான் மகாலிங்கத்திற்கு ரூ.1,30,000/– கடன் கொடுத்திருந்தேன். நான் ரூ.1,30,000 கடன் கொடுத்தற்கு ஏதாவது எழுதி வாங்கியுள்ளேனா என்றால் வழக்குரை சொத்தின் அன்றைய வழிகாட்டி மதிப்பு ரூ.11,500 என்று இருந்ததால் அதை காண்பித்து ஈடு கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தேன்.

2. வா.சா.ஆ.1 ஆவணம் ஈடு கடன் பத்திரமா அல்லது கிரைய ஒப்பந்த பத்திரமா என்றால் எங்களுக்குள் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்திற்காக மேற்படி ஈடு கடன் பத்திரம் பதிவு செய்தோம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள நிபந்தனைகள் அனைத்தும் ஈடு கடன் சம்மந்தமானது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் கிரைய பதிந்து தர வேண்டும் என மகாலிங்கம் மீதோ அல்லது மகாலிங்கத்தின் வாரிசுகள் மீதோ வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி நான் தாக்கல் செய்த வழக்கின் விபரங்களை சொல்ல முடியுமா என்றால் அந்த வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியாது. நான் எந்த வழக்கும் தாக்கல்செய்யவில்லை என்றும், எனக்கு ஆதரவாக எந்த தீர்ப்பும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.1 ஆவணம் ஈடு கடன் பத்திரம் தான் என்றும், அது நான் சொல்வது போல் கிரைய ஒப்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல. 2015ம் ஆண்டு மகாலிங்கத்திடம் ரூ.50,000 கொடுத்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் ரூ.50,000 கொடுத்தற்கு ஏதேனும் ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால் எழுதி வாங்கவில்லை. மகாலிங்கம் எந்த வருடம் இறந்தார் என்றால் 2020ம் ஆண்டு இறந்தார். நான் வாதிகளிடம் ரூ.1,50,000 கொடுத்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எந்த தேதியில் வாதிகளிடம் ரூ.1,50,000 கொடுத்தேன் என்றால் 2023ம் ஆண்டு கொடுத்தேன் தேதி மாதம் எனக்கு நியாபகம் இல்லை. நான் ரூ.1,50,000 கொடுத்ததற்கு எழுத்துப்பூர்வமாக எதேனும் ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டதா என்றால் எழுதிக்கொடுக்கப்படவில்லை. நான் 2005ம் ஆண்டு மகாலிங்கத்திடம் ஈடுத்தொகை போக கூடுதலாக கொடுத்த ரூ.1,18,500 தொகைக்கு எந்தவித ஆவணமும் எழுதி வாங்காத சூழ்நிலையிலும் 2015ம் ஆண்டு மகாலிங்கத்திடம் மீதம் ரூ.50,000 கொடுத்துவிட்டு எந்த ஆவணமும் எழுதி வாங்காத சூழ்நிலையிலும் 2023ம் ஆண்டு வாதிகளிடம் ரூ.1,50,000 கொடுக்கும்போது எதனால் எழுத்துப்பூர்வமான ஆவணம் எழுதி வாங்க வேண்டும் என்று எனக்கு தோணவில்லையா என்றால் நான் எழுத்துப்பூர்வமான ஆவணம் எழுதி தருமாறு கேட்டேன் அதற்கு அவர்கள் பதிவு செய்யப்பட்ட ஈடு கடன் பத்திரம் இருப்பதால் அதுவே போதும் என்று சொல்லிவிட்டார்கள்.

4. மகாலிங்கம் எழுதிக்கொடுத்த ஈடு கடன் பத்திரம் 2018ம் ஆண்டே காலாவதியாகிவிட்டது என்றும், நான் 2023ம் வருடம் வாதிகளிடம் ரூ.1,50,000 கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. 04.10.2024ம் தேதி வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பான வா.சா.ஆ.3 எனது முகவரிக்கு தான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 அறிவிப்பை நான் வாங்க மறுத்துவிட்டதாக 05.10.2024ம் தேதி திரும்ப வந்துள்ளது என்றால் அன்றைய தேதி நான் ஊரில் இல்லை அதனால் திரும்ப வந்தது. மேற்படி அறிவிப்பை வேண்டுமேன்றே வாங்க மறுத்துவிட்டு தற்போது வழக்கிற்காக அன்றைய

தேதியில் ஊரில் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

5. மகாலிங்கம் என்னிடம் வாங்கிய கடனை அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே திரும்ப செலுத்திவிட்டதாக வாதிகளிடம் மகாலிங்கம் கூறியுள்ளார் என்றால் அது தவறாகும். ஈடு கடன் பத்திரத்தை ரத்து செய்து தருமாறு உறவினர்கள் மூலம் வாதிகள் என்னை அனுகினார்கள் என்றும், அதற்கு நான் கூடுதலாக பணம் கேட்டு மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல, அவர்கள் எனக்கு தர வேண்டிய தொகையை தான் கேட்டேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு மகாலிங்கத்திடம் ரூ.1,30,000 ம், 2015 ம் வருடம் மகாலிங்கத்திடம் மேலும் ரூ.50,000 மும், வாதிகளிடம் ரூ.1,50,000 மும் கொடுக்கவில்லை என்றும், வழக்குரை சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஈடுகடன் பத்திரம் காலாவதியாகிவிட்டதால் அதை சட்டப்படி ரத்து செய்யப்பட வேண்டும் என்றும், வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.06.29 16:39:57 +0530

District Munsif,
Bodinayakanur.